செய்தி குறிப்பு . 7 நாள் .17.01.10

# தோழர் ஜோதிபாசு மறைவு.

## முதலமைச்சர் கலைஞர் இரங்கல்.

பொதுவுடைமை இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவரும், என்னுடைய அருமை நண்பருமான தோழர் ஜோதிபாசு அவர்கள் மறைந்த செய்தியினைக் கேட்டு மிகவும் துயர் அடைந்தேன். மேற்கு வங்க மாநிலத்தின் முதலமைச்சராக பல ஆண்டுக் காலம் வீற்றிருந்து – அந்த மாநிலத்தின் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டவர் அவர். தன் மனதிலே தோன்றிய கருத்துக்கள் எதுவாக இருந்தாலும் அதனை துணிந்து வெளிப்படுத்த அவர் தயங்கியதே இல்லை. பொதுப் பிரச்சினைகளிலும் – மதச் சார்பற்ற அணிக்கு மக்களைத் திரட்டுவதிலும் அவரோடு இணைந்து செயல்பட்ட பல நிகழ்வுகள் என் உள்ளத்தில் இன்னும் நினைவுகளாக நிலைத்திருக்கின்றன. அவருடைய மறைவால் துயருறும் அவருடைய குடும்பத்தினருக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.